செ.வெ.எண்: 03 நாள்: 02.01.2020

**லக்னோவில் நடைபெறவுள்ள தேசிய இளைஞர் விழாவில் கலந்து கொள்ள மாவட்ட அளவிலான தேர்வுகள் நடைபெறவுள்ளது.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

லக்னோவில் நடைபெறவுள்ள தேசிய இளைஞர் விழாவில் கலந்து கொள்ள மாவட்ட அளவிலான தேர்வுகள் நடைபெறவுள்ளது. இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தாவது.

12.01.2020 முதல் 16.01.2020 முடிய உத்திரப்பிரதேசம் மாநிலம் லக்னோ நகரில் நடைபெறவுள்ள 23-வது தேசிய இளைஞர் விழாவில் கலந்து கொள்ளும் கலைஞர்களை தேர்வு செய்வதற்கு புதுக்கோட்டை மாவட்ட அளவில் நாட்டுப்புற நடனம், நாட்டுப்புறப்பாட்டு, ஓரங்க நாடகம் (ஆங்கிலம் அல்லது ஹிந்தி), கர்நாடக சங்கீதம், ஹிந்துஸ்தானி சங்கீதம், பேச்சுப் போட்டி, ஹார்மோனியம், மிருதங்கம், புல்லாங்குழல், வீணை, சிதார், கிடாா, தபேலா, மணிப்புரி நடனம், பரதநாட்டியம், குச்சுப்புடி, கதக், ஒடிஸி நடனம் ஆகிய 18 பிரிவுகளில் தேர்வுகள் 04.01.2020 அன்று காலை 8.00 மணி முதல் மாவட்ட விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

13 வயது முதல் 25 வயதிற்குட்பட்ட ஆடவர் மற்றும் மகளிர் மேற்காணும் மாவட்ட அளவிலான தேர்வுகளில் கலந்து கொள்ளலாம். மாவட்ட அளவிலான தேர்வுகளில் முதலிடம் பெறுபவர்கள் மாநில அளவிலான தேர்வுகளிலும், மாநில அளவிலான தேர்வுகளில் கலந்து கொண்டு தேர்வு செய்யப்படுபவர்கள் தேசிய இளைஞர் விழாவில் கலந்து கொள்ளவும் அழைத்துச் செல்லப்படுவார்கள்.

மேற்காணும் மாவட்ட அளவிலான தேர்வுகளில் கலந்து கொள்ள விருப்பமுள்ளவர்கள் தங்களது வயதுச் சான்றுடன் 04.01.2020 அன்று காலை 8.00 மணிக்கு புதுக்கோட்டை மாவட்ட விளையாட்டரங்கத்திற்கு வந்து தங்களது பெயரினை பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் விபரங்களுக்கு மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், விளையாட்டரங்கம், புதுக்கோட்டை-622 001 என்ற முகவரியிலோ அல்லது 04322-222187 என்ற தொலைபேசி எண்ணிலோ, 7401703498 அலைபேசி எண்ணிலோ தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**செய்தி வெளியீடு - செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**